**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**அ.வ.எண்.121/2008**

**<u>தேதி : 04.03.2026</u>**

**<u>(வா.சா.1) – திருமதி. நிர்மலாதேவி</u>**

**<u>சாட்சி அழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 19 முதல் 22 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.</u>**

**<u>குறுக்கு விசாரணை :– (19 முதல் 22 பிரதிவாதிகள் தரப்பில்)</u>**

1. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.17 மற்றும் வா.சா.ஆ.18 கிரைய ஆவணங்கள் பற்றி என்னுடைய வழக்குரையில் கூறவில்லை என்றால் சரிதான், தற்போதுதான் எனக்கு அது பற்றித் தெரியும். வா.சா.ஆ.18 கிரைய ஆவணத்தில் கீழ்க்கண்ட சொத்தும், இதைச் சேர்ந்த வேறு சொத்துக்களும் எனது சிறிய தகப்பனார் ராமன் பூசாரி மகன் தம்பாட்டி (எ) நாராயணன் அவர்களுக்கு உரிமைப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவர் தனது சொத்துக்களை 08.10.1945ம் நாள் ஆவண எண்.2249ன் மூலம் எனக்கும் எனது மனைவி நாராயணி அம்மாளுக்கும் உரிமைப்படுத்தி வைத்துள்ளார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. மேற்படி ஆவணத்தில் சொத்துக்கள் எனது தகப்பனாரின் சுவாதீன அனுபவத்தில் இருந்து வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சொத்து பலவீனமான நிலையில் இருப்பதாகவும், யாத்திரிகர்கள் மற்றும் பக்தர்கள் யாரும் அங்கு தங்குவதில்லை என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், அந்த இடத்தை என் தகப்பனார் கெடுத்து பணம் வாங்கிக்கொண்டு கடை கட்டிவிட்ட நிலையில் அவர்கள் வாடகையும் கொடுக்கவில்லை. மேற்படி ஆவணத்தில் கிரையச் சொத்துடன் சேர்ந்த சொத்தில் வரும் வாடகை பராமரிப்புச் செலவிற்குப் போதவில்லை என்றும், வரி முதலானவைகள் கட்டுவதற்கே கடன் வாங்கிக் கட்டுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. எனது தகப்பனாரின் குடும்பச் செலவிற்கும், வைத்தியச் செலவிற்கும் வருமானம் இல்லை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பொய். மேற்சொன்ன காரணங்களுக்காக மடத்தில் மேடல்புறம் உள்ள குடோனை கிரையம் செய்து கொடுப்பதாக அந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், அது சாப்பாடு போடும் இடமாக இருந்தது. கிரையம் வாங்கிய பிறகு 19 முதல் 22

வரையிலான பிரதிவாதிகள் அந்த இடத்தில் ரூ.3,00,000/– செலவு செய்து இடிந்து போன கூரையை சரி செய்து புதிய கூரை அமைத்ததாகச் சொன்னால் சரியல்ல. கடைகள்தான் கட்டப்பட்டுள்ளது. என் தகப்பனார் உயிருடன் இருந்தபோது நான் கேரளாவில்தான் இருந்தேன் என்றால் சரிதான். அடிக்கடி பழனிக்கு வருவேன். நான் அடிக்கடி பழனிக்கு வந்ததாகச் சொல்வது பொய் என்றால் சரியல்ல.

4. நான் என் தகப்பனாருக்கு எவ்வித பராமரிப்பும் செய்யாததால்தான் காலாச்சேபம் செய்யவேண்டிய கட்டாயத்திற்காக அவர் சொத்துக்களை கிரையம் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் ஆரம்பம் முதலே கேரளாவில்தான் வசித்து வருகிறேன் என்றும், நான் என் தகப்பனாரை பராமரிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல, நான் எப்போதும் என் தகப்பனாரை பராமரித்துக்கொண்டுதான் இருந்தேன். நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**(23 முதல் 26 பிரதிவாதிகள் தரப்பில் மேற்கண்ட குறுக்கு விசாரணையை தக்க வைத்துக்கொள்ளப்பட்டது. மேலும், பின்வரும் குறுக்கு விசாரணை செய்யப்பட்டது)**

**<u>23 முதல் 26 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. 1ம் லக்கச் சொத்து பலவீனமடைந்து அதை சரி செய்வதற்காக என் தகப்பனார் கடன் வாங்கிய விபரம் எனக்கு தெரியுமா என்றால் அவ்வாறு கடன் வாங்கியதாகச் சொல்வது பொய். என் தகப்பனாரின் இரண்டாவது மனைவி லீலாவதிக்கு உடல்நிலை சரியில்லாமல் அதற்காக என் தகப்பனார் கடன் வாங்கியதாகச் சொன்னால் சரியல்ல. மேற்படி லீலாவதிக்கு உடல்நிலை சரியில்லாததால் மருத்துவச் செலவுகள் ஏற்பட்டதாகச் சொன்னால் சரியல்ல. என் தகப்பனார் சர்வ சுதந்திர பாத்தியமாக சொத்துக்களை அனுபவித்து வந்தார் என்று சொன்னால் எங்களுக்கு எதுவும் கொடுக்காமல் அனுபவித்து வந்தார். கடன் வாங்கி கட்டிடங்களை புதுப்பிக்காமல் இருந்திருந்தால் மேற்படி கட்டிடம் இடிந்திருக்கும் என்று சொன்னால் அது மடமாக இருந்தால் போதுமானது, கடைகளே தேவையில்லை.

2. என் தகப்பனாரின் சூழ்நிலைக்கு அவர் கடன் வாங்கி அது சம்பந்தமாக செய்துள்ள கிரையம் செல்லுபடியாகக்கூடியது என்றால் என் அம்மாவின் தாத்தா எங்களுக்கு கொடுத்த சொத்து என்பதால் கிரையங்கள் செல்லாது. என்னுடைய தகப்பனார் கேரளாவில் உள்ள பூர்வீகச் சொத்துக்களை 1 முதல் 3

**பிரதிவாதிகளுக்கு கொடுத்துள்ளதாகச் சொன்னால் சரியல்ல. என் தகப்பனாரின் சட்டப்படியான வாரிசுகளான 4 முதல் 8 பிரதிவாதிகளை மோசடி செய்வதற்காக வழக்கை தாக்கல் செய்துள்ளதாகச் சொன்னால் சரியல்ல.**

**மறு விசாரணை :– இல்லை.**

Taken down by me in open court and
read over to the witness in Tamil and
acknowledged by him/her to be correct.

K. BHARATHI Digitally signed by K. BHARATHI Date: 2026.03.04 17:08:11 +0530

Additional Sub Judge,
Palani.